# உலகத்தின் மேல் பறக்கும் மூன்று தூதர்கள் !

## P.V. JESUDAS

தேவனுடைய கிருபையும், இறக்கமும், சமாதானமும், உங்களோடு இன்றும் என்றும் எப்பொழுதும் இருப்பதாக!

**"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்." – ஆமோஸ் 3:7**

ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கிற விசேஷமான ஒரு வாக்குத்தத்தம், இந்த உலகத்தில் நடக்கபோகிற காரியங்களையும், இனிமேல் வரபோகிற காரியங்களையும் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு சொல்லாமல் எதையும் செய்யமாட்டார்.

நோவா என்ற கர்த்தருடைய பிள்ளை, 120 ஆண்டுகளாக இந்த உலகம் பிரளயத்தினாலே அழியபோகிறது என்று பிரசங்கித்தான்.

**"அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சம்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார். "~ஆதி. 6:3**

நோவா தன்னுடைய மக்களோடுகூட சேர்ந்து, அன்றைய உலகம் முழவதும் சென்று, தேவ ஆவியின் பெரும் வல்லமையினாலே மக்களிடத்திலே 120 வருஷம் வரபோகிற அழிவை குறித்து பேசினார். இதை குறித்து பேதுருவும் எழுதுகிறார்.

**"பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து;"~2 பேதுரு 2:5**

நினிவே பட்டணத்தை அழிக்க ஆண்டவர் தீர்மானித்தபோது, அங்கு யோனா தீர்க்கதரிசியை அனுப்பி 40 நாட்களாக எச்சரித்து வந்தார். யோனா இரவு பகலாக அரசர்கள் முதற்கொண்டு ஆண்டி வரைக்கும், பெரியவர்கள் முதற்கொண்டு சிறியவர்கள் வரையான யாவருக்கும், வல்லமையாக நினிவே பட்டணம் அழிய போகிறது என்று பிரசங்கம் செய்தான்.

இந்த உலகத்தின் கடைசி நாட்களிலே ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு தூதை நிச்சயமாக தருகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் வருவதற்கு முன்பாக யோவான் ஸ்நானகன் எழும்பி, ஆண்டவரை பற்றி சாட்சி சொன்னான்.

இந்த கடைசி நாட்களிலே ஆண்டவர் ஒரு விசேஷமான தூதை வைத்திருக்கிறார்.

~I~

**"பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, " – வெளி. 14:6**

இந்த ஆறாம் வசனத்திலிருந்து பனிரெண்டாம் வசனம் வரைக்கும், இந்த உலகத்தின் கடைசி நாட்கள் வரைக்கும் மூன்று தூதுகள் செல்லும் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த மூன்று தூதுகளை ஆண்டவர், மூன்று தூதர்களுக்கு ஒப்பிட்டு பேசுகிறார். தூதர் என்றால் தூதுகளை கொண்டு வருகிறவர் என்று அர்த்தம். இந்த தூது மனுஷனுடைய தூது அல்ல, இது பரலோகத்திலிருந்து வந்த தூது. ஆகவே நோவாவின் காலத்திலேயும், நினிவே பட்டணத்துக்கும், சோதோம் கொமோராவுக்கும் ஆண்டவர் அழிவின் தூதுகளை கொடுத்தது போல, இன்று அவர் வருவதற்கு முன்னதாக, இந்த உலகம் முற்றிலுமாக அக்கினியால் அழிவதற்கு முன்னதாக மூன்று பெறும் தூதுகளை, ஆண்டவர் பரலோகத்திலிருந்து தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிறார்.

இந்த தூதுகள் பூமியின் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும், அறிவிக்கத்தக்கதாக இருக்கிறது. ஆண்டவர் தம்முடைய மிகுந்த கிருபையினாலே ஏதாவது ஒரு காரியத்தை சொல்லும்போது தன்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு அந்த தூதை கொடுத்து, அந்த தீர்க்கதரிசிகள் உலகமெங்கும் இருக்கிற மக்களுக்கு அதை கொடுக்கத்தக்கதாக ஏற்பாடு செய்திருக்கிறார். திடிரென்று ஆண்டவர் சொல்லாமால் ஒரு கரியத்தையும் செய்யமாட்டார். அந்த காரியங்கள் வருவதற்கு முன்னதாகவே தம்முடைய பிள்ளைகளுக்கு சொல்லி விடுகிறார். ஆகவே யாரும் எங்களுக்கு தெரியாது என்று சொல்லிவிடாதபடி, ஆண்டவர் அப்படி செய்கிறார்.

என்றாலும் சாத்தான், இப்படிப்பட்ட விசேஷமான காரியங்களை கேட்கக்கூடாதபடி மக்களை வழிமரித்து ஆங்காங்கு அவருடைய காரியங்களிலே ஈடுபட செய்து கொண்டிருக்கிறான்.

இந்த உலகத்தின் மக்கள் குனிந்த தலையாக இருக்கிறார்கள். இந்த உலகத்தை நோக்கி பார்த்தவர்களாக இருக்கிறார்கள் தவிர, வானத்தை அண்ணார்ந்து பார்த்தவர்களாக இருக்கமாட்டோம் என்கிறார்கள். உலக கவலைகளும், உலகத்தினுடைய காரிங்களும், தங்களுடைய வாழ்நாளை இந்த

உலகத்தின் காரியங்களுக்காகவே செலவழித்துகொண்டிருக்கிறார்கள். தலை நிமிர்ந்து பரலோகத்தை பார்ப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடையாது.

மூன்று தூதர்களின் தூதுகளை நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

**“பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, ” – வெளி. 14:6**

~2~

**“வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே! என்றான். ” – வெளி. 14:8**

**“அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொருபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ,” – வெளி. 14:9**

இங்கு சொல்லப்படுகிற இந்த தூதுகள் சுவிசேஷகத்தினுடைய ஒரு பாகமாக இருக்கிறது. ஆண்டவர் அன்று ஆதாம் ஏவாளுக்கு கொடுத்த சுவிசேஷம், அப்படியே இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்த சுவிசேஷத்தினுடைய கடைசி தூதை, இந்த உலகத்திலிருக்கிற எல்லா மக்களும் பார்க்கும்படியாக செய்கிறார்.

**“திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து,**
**சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின. ” – வெளி. 10:2**

ஆகவே இந்த தூதானது ஆவியானவரின் பெறும் வல்லமையோடு இந்த உலகத்தில் போய்கொண்டிருக்கிறது.

தூதன் மிகுந்த சத்தமிட்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அனைவரும் கேட்கவேண்டும் என்று பொருள். இதை யாரும் கேட்கக்கூடாதபடி இருக்கக்கூடாது. இந்த உலகத்தின் எந்த மதமானாலும் சரி, யாவரும் கேட்க வேண்டிய ஒரு தூதாக இருக்கிறது.

இந்த தூது உலகம் முழுவதும் புத்தக வடிவிலும், ரேடியோ மூலமாகவும், டி.வி மூலமாகவும், இன்டர்னட் மூலமாகவும் போய்கொண்டிருக்கிறது.

**“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.” – அப். 1:8**

இங்கு 70 சீஷர்களுக்கு முன்பாகவும் 500 கிறிஸ்தவர்களுக்கு முன்பாகவும் இயேசு இந்த வார்த்தைகளை சொன்னார். முதலாவது எருசலேமிலே பிரசங்கம் பண்ணுங்கள் என்றார். பிறகு யூதேயாவுக்கு செல்லுங்கள், பின்பு சமாரியாவுக்கு போங்கள், பிறகு பூமியின் கடைசி பரியந்தம் போங்கள் என்றார். எருசலேமிலே யூதர்கள் இருந்தார்கள். அவர்கள் வேதம் படித்தவர்களாக இருந்தார்கள். 1500 வருஷமாக தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். இப்படியாக அந்த இடத்திலேதான் முதலாவது பிரசங்கம் செய்ய சொல்லுகிறார். முதலாவது கிறிஸ்தவ மக்கள் சத்தியம் முழுவதையும் அறிந்துகொள்ளவேண்டும். இன்றைக்கு சத்தியம் முழுவதும் கிறிஸ்தவர்களுக்கு தெரிவதில்லை. ஏதோ ஒரு பகுதியை தெரிந்துகொண்டு வேதம் முழுவதையும் அறிந்தவர்களாக காட்டிக்கொள்கிறார்கள். ஆகவே முதலாவது தேவனுடைய பிள்ளைகள் தான் சத்தியத்தை முழுவதுமாக அறிந்துகொள்ளவேண்டும். **“இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்ன வென்றால்: நீங்கள் புறஜாதியார் நாட்டுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்.”**

**~ மத்தேயு 10:5,6**

~3~

ஆண்டவர் பூரணமான ஒரு சுவிசேஷம், தன்னுடைய பிள்ளைகளுக்கு முதலாவது தெரியவேண்டும் என்று நினைக்கிறார். இயேசு கிறிஸ்து முதலாவது எருசலேமிலேதான் பிரசங்கம் செய்தார்.

**“பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள். அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். அப்படியே அவர் படவில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தரவுகொடுக்க அவரை வேண்டிக்கொண்டான். இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.”**

**~மாற்கு 5:16~19.**

ஆகவே கர்த்தர் இங்கு முதலாவது உன் இனத்தரிடத்திலே உன் வீட்டிற்குப் போய் அறிவியென்று சொன்னார்.

இந்த உலகத்தின் கடைசி நாட்களிலே, மூன்று தூதுகளோடு இந்த உலகத்தின் சுவிசேஷம் முடிகிறது. இந்த மூன்று தூதுகளுக்கு அப்புறம், வேறுவிதமான தூதை இந்த உலகத்திற்கு தருகிறதில்லை. ஆகவே இந்த மூன்று தூதுகளோடும் இந்த உலகத்தினுடைய இரட்சிப்பின் செய்தி முடிவடைகிறது.

**“சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி; இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும் என்று,” – வெளி. 10:5,6**

இந்த மூன்று தூதுகள் முடிந்தவுடனே, இனி காலம் செல்லாது. இந்த உலகத்தின் காரியங்கள் எல்லாமே திடிரென்று ஒரு முடிவுக்கு வந்துவிடும்.

இப்பொழுது கொடுக்கப்படுகிற தூதுகள் யாவும் வல்லமையான தூதுகளாக இருக்கிறது. மக்கள் நிச்சயமாக கேட்கவேண்டிய தூதாக இருக்கிறது. மக்களுடைய உள்ளத்தின் ஆழத்திலே பதிய வேண்டிய தூதாக இருக்கிறது. அதற்காகதான் வேதம் , மிகுந்த சத்தமிட்டு என்று சொல்லுகிறது. தேவனுக்கு பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள் என்று இந்த தூது சொல்லுகிறது. இந்த கடைசிக் காலத்தின் தூது, தேவனுக்கு பயப்படுங்கள் என்று சொல்லுகிறது. இந்த உலகத்தில், கர்த்தருடைய பிள்ளைகள் மனிதர்களுக்காக பயந்து

கொண்டிருக்கிறோம். அரசாங்கத்திற்காக பயந்து கொண்டிருக்கிறோம். தேவனை தவிர எல்லாவற்றிற்கும் பயப்படுகிறோம். ஆனால் உலகத்தின் காரியங்களுக்காகவும் மக்களுக்காகவும் அதிகாரங்களுக்காகவும் பயந்து கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவன் சொல்லுகிற முதல் தூது என்ன? தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள் என்பதே.

நாம் யாவரும் தேவனை தொழுகிறோம். ஆனால் அதன் மத்திய பாகமாக அவருக்கு பயந்து அவரை மகிமைப்படுத்தவேண்டும்.

இன்றைக்கு உலகத்தில் எல்லா கனத்தையும் மகிமையும் மனிதனே எடுத்து கொள்ளுகிறான். நான் இப்படி செய்தேன். நான் அநேக வருஷக்காலமாக



பாடுப்பட்டு இப்படி செய்தேன். நான் இந்த சபையை கட்டினேன். இத்தனை பேரை நான் ஆண்டவருடைய பாதத்திலே கொண்டு வந்தேன். நான் என் ஊழியத்திலே பெரிய காரியங்களை செய்தேன். நான் அதிகமாக காணிக்கை கொடுத்தேன் என்றெல்லாம் நம்மையே மகிமைப்படுத்திக்கொள்ளுகிறோம்.

ஆனால் ஆண்டவர் சொல்லுகிறார், தேவனுக்கு பயந்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள். கடவுளுக்கு கொடுக்கும் மகிமையை மனிதர்களாகிய நாம் ஒருபோதும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

ஒரு வீட்டை கட்டினேன் என்று பெருமையாக சொல்லாமல், ஆண்டவர் இந்த வீட்டை கட்டுவதற்கு எத்தனை உதவிகள் செய்தார் என்று சொல்லவேண்டும். அவருக்கே கனத்தையும் மகிமையும் கொடுக்கவேண்டும். இன்றைக்கு நாம் வாழ்வதும் அவராலே, நாம் பிழைப்பதும் அவராலே, யாவும் அவராலே ஆகிறது.

**“காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். ” – பிரசங்கி 12:13,14**

இந்த தூதுனுடைய முக்கிய காரியம்: தேவனுக்கு மாத்திரம் பயப்படவேண்டும். ஏனென்றால், சீக்கிரத்தில் பெரிய காரியங்கள் யாவும், இந்த உலகத்தில் நடக்க போகிறது. எதற்காக அவருக்கு பயப்படவேண்டும் ? எதற்காக அவரை மகிமைப்படுத்த வேண்டும் ? அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேலை வந்தது. நமக்கு முன்பாக நியாயத்தீர்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தவிதமாக நடக்கபோகிறதாலே அவருக்கு பயந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளவேண்டும். அந்த நாளில், என்னுடைய கற்பனைகளை கைக்கொண்டாயா? என்று ஆண்டவர் கேட்பார்.

**“ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.” – யோவான் 12:47,48**

அவருடைய வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவரை தள்ளிவிடுகிறோம் என்று பொருள். அவருடைய வசனமே கடைசி நாட்களில் நியாயந்தீர்க்கும் என்கிறார்.

**“எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். ஏனென்றால், விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலைசெய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய். சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்.” – யாக்கோபு 2:10~12.**

இந்த பத்து பிரமாணத்தினாலேதான் நாம் யாவரும் நியாயத்தீர்ப்பு அடையப் போகிறோம்.

இந்த முதலாவது தூது முதன்முதலாக 1844~ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதனுடைய விளக்கம் எமது புத்தகமாகிய “2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்” என்ற



புத்தகத்தில் இருக்கிறது.

1844~ஆம் ஆண்டிலே பரலோகத்திலே நியாயத்தீர்ப்பு துவங்கிவிட்டது என்று வேதம் சொல்லுகிறது. அந்த 1844~லிலே ஆவியானவர் இந்த உலகத்திலே ஊற்றப்பட்டார்.

**“நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?” – 1பேதுரு 4:17.**

இந்த நியாயத்தீர்ப்பின் காலத்திலே, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், ஆண்டவரை தேட வேண்டும் என்று நம் தேவன் சொல்லுகிறார். இந்த உலகத்திலுள்ளவைகளை தேடாமல், பரலோகத்தின் ஆண்டவரை தேடுங்கள் என்று சொல்லுகிறார். இந்த 160 வருஷக்காலமாக நடக்கிற நியாயத்தீர்ப்பு, இன்றோ நாளையோ நம்முடைய புத்தகம் எடுக்கப்பட்டால், நம்முடைய நிலைமை என்னவாக இருக்கும் என்று நினைத்துபாருங்கள். ஆகவே ஆண்டவர் இன்று நமக்கு எச்சரிப்பின் தூதை கொடுத்துகொண்டேயிருக்கிறார்.

நாம் யாவரும் இந்த நியாயத்தீர்ப்பின் சத்தியத்தை அறிந்தவர்களாக தேவனுக்கு பயந்து அந்த நியாயத்தீர்ப்பிலே நாம் நிலைநிற்கவேண்டும் என்று தேவன் பெரிதாய் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நாம் எப்பொழுது ஞானமுழுக்கு பெறுகிறோமோ, அன்றே ஆண்டவருடைய பிள்ளைகளாகிவிடுகிறோம்.

சிலர், நாங்கள் முழுக்கு ஞானஸ்நானம் முன்னாலே பெற்றுவிட்டோமே, பிறகு பாவம் செய்ததினால், இப்பொழுது என்ன செய்வது? என்று கேட்கிறார்கள். அதற்காகதான் ஆண்டவர் அப்போஸ்தலர் 19~ஆம் அதிகாரத்திலே, இரண்டாவது முறை முழுக்கு ஞானஸ்நானம் பெறலாம் என்று கூறுகிறது. சரியானபடி வேதம் அறியாமல், வேதசத்தியத்தின்படி சரியானபடி நடவாமலிருந்து ஞானமுழுக்கு பெற்றாலும், திரும்பவும் மனந்திரும்பி ஞானமுழுக்கு பெற்று கொள்ளலாம் என்று ஆண்டவர் எழுதி வைத்திருக்கிறார்.

1844~ ஆம் வருடத்திலே நியாயத்தீர்ப்பு வந்தது என்பதற்காகவே seventh day adventist சபையை ஆண்டவர் எழுப்பினார். அந்த ஆண்டிலேதான் அந்த சபை உருவானது. அந்த ஆண்டிலிருந்து இன்றுவரை இந்த திருச்சபைக்கு, மேலான ஒரு சத்தியத்தை யாரும் பிரசங்கித்தது கிடையாது. இனி யாரும் பிரசங்கம் செய்யவுமாட்டார்கள். ஏனென்றால் வேத்திலுள்ள அத்தனை சத்தியங்களையும் சொல்லிகொண்டிருக்கிறது இந்த சபை.
இக்காலத்திலே சத்தியம் முழுவதும் அறிந்து, மிக வேகமாக திருமுழுக்கு பெற்றக்கொள்ளவேண்டும் என்று தேவன் உணர்த்திக்கொண்டேயிருக்கிறார். காலம் கடந்துவிட்டது. இன்னும் மீதியானது ஒன்றுமில்லை. நியாயத்தீர்ப்பை பற்றி வேறு சபைகளில் அதிகமாக பிரசங்கம் செய்வது கிடையாது. மனந்திரும்பு என்று சொல்வதை விட பிள்ளிசூனியமா? வேதனைகளா? கண்ணீரா? கவலையா? கஷ்டமா? கடனா? என்று முக்கால்பாக சபைகள் போதித்து, விசுவாசிகளை அடைந்து ஏமாற்றுகிறார்கள். உன்னை ஆண்டவர் குணமாக்குகிறார். என்னிடம் வந்து உன்னை பற்றின எல்லா காரியத்தையும்



சொல்லிவிட்டார் என்றெல்லாம் மக்களை ஏமாற்றி காணிக்கை வாங்குகிறார்கள்.
தேவை ஒன்றே, முதலாவது இரட்சிக்கப்படு. காலம் சமீபித்துவிட்டது. இன்றே அவர் வந்துவிட்டர் என்றால் நீ எங்கே போவாய்? என்றுதான் இந்த seventh day adventist சபை போதித்து வருகிறது. முதலாவது நீ இரட்சிப்படைந்து பிறகு நீ தேவனிடம் கெஞ்சி அழுது மன்றாடு. நீ கேட்கிற காரியம் உனக்கு நிச்சயமாக கிடைக்கும். மற்றவர்களிடம் போய் தவறான உபதேசங்களை கேட்டு, அவர்களிடமே எனக்காக ஜெபியுங்கள் என்று கேட்பது சரியல்ல. உன்னை பரிசுத்தப்படுத்திகொண்டு நீ ஜெபி, உன் ஜெபத்தை தேவன் நிச்சயமாக கேட்பார்.
இந்த உலகத்தில் எத்தனையோ சபைகள் இருக்கிறது. இந்த நியாயத்தீர்ப்பின் வேலை வந்தது, அது பரலோகத்தில் நடக்கிறது என்ற சத்தியத்தை யாரும் பிரசங்கம் பண்ணுவதில்லை. ஆகவே இந்த தூதை, உலகமெங்கும் செல்வதற்கு கர்த்தர், இந்த seventh day adventist திருச்சபையை எழுப்பினார்.
ஆகவே இன்றைக்கு அநேகர் தேவ ஆவியானவர் வரும்போது பல பாஷைகள் பேசுகிறோம், அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் மத்தேயு 7~ஆம் அதிகாரத்திலே நான் உங்களை அறியேன் என்று சொல்லிவிடுவார் என்று ஆண்டவர் சொல்லுகிறார் அல்லவா? அக்கிரம செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர் சொன்னால், ஆண்டவரே, என்ன அகன்று போங்கள் என்று சொல்லிவிட்டீரே, நாங்கள் உம்முடைய நாமத்தினாலேயே பிசாசுகளை துரத்தினோம், அற்புதங்களை செய்தோம், அடையாளங்களை செய்தோம் அல்லவா என்று கேட்டதற்கு, அவர் நான் உங்களை அறியேன் என்று சொல்லிவிடுவார்.
நாம் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திலே குற்றமற்றவர்களாக நிற்கவேண்டும். இதுதான் தேவனுடைய தூது. ஆவியானவரின் வல்லமையினாலேயும், கிருபையினாலேயும், கர்த்தருடைய பிள்ளைகள் குற்றமற்றவர்களாக நிற்கமுடியும். மாசற்றவர்களாக நிற்கமுடியும். தேவனுடைய பத்து பிரமாணங்களையும் கைக்கொள்ளமுடியும், இதுதான் இரட்சிப்பின் சுவிசேஷம் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.
ஆகவே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும் உண்டாக்கினவரேயே தொழுதுக்கொள்ளுங்கள் என்று கூறினார், அதாவது சிருஷ்டி கர்த்தாவை தொழுது கொள்ளுங்கள் என்று அர்த்தமாகிறது. இன்றைக்கு உலகத்தின் மக்கள் சிருஷ்டிகளை தொழுதுக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டவரை அறிந்த நாம், தேவனுக்கு மேலாக பணத்தை விரும்புகிறோம். ஆண்டவருக்கு மேலாகவே நாம் பதவியை கனப்படுத்துகிறோம். ஆண்டவருக்கு மேலாகவே நாம் இந்த உலகத்தின் காரியங்களை நேசிக்கிறோம். ஆண்டவருக்கு மேலாக நாம் எதை நேசிக்கிறோமோ அதுவே நமக்கு கடவுளாகிவிடுகிறது. இன்றைக்கு பெண்கள் புருஷனைவிட நகையைதான் அதிகமாக நேசிக்கிறார்கள். அவர்கள் சாகும்வரை தங்கள் நகையை கழற்றவே மாட்டார்கள். கல்லறைக்கு போகும் முன்தான் யாராவது கழற்றிவிடுவார்கள். ஆகவே நாம் எதை அதிகமாக நேசிக்கிறோமோ அதுவே நமக்கு கடவுளாக ஆகிவிடுகிறது. வானத்தையும் பூமியையும் படைத்தவரேயே நாம்



அதிகமாக நேசிக்கவேண்டும் என்ற கர்த்தர் விரும்புகிறார். பரலோகத்திலே இருக்கிறவர்கள் தேவனை எதற்காக தொழுதுகொள்ளுகிறார்கள் என்றால். வெளி.4:10,11.
**“இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து: கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்திலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.” ~ வெளி.4:10,11.**
அவர் சிருஷ்டி கர்த்தாவாக இருப்பதால் பரலோகத்திலும் தேவதூதர்கள் அவரை தொழுதுகொள்ளுகிறார்கள். இந்த பரிசுத்த ஓய்வுநாளைகுறித்தும் வேதம் அதிகமாக பேசுகிறது. பரிசுத்த ஓய்வுநாள், அண்டசராசரங்களை படைத்த ஆண்டவரை சுட்டிகாட்டுகிறது. ஆறு நாட்களுக்குள்ளே வானத்தையும் பூமியையும் அவர் படைத்தார் என்று காட்டுகிறது.
**“வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே! என்றான். ” ~ வெளி.14:8.**
இந்த பாபிலோன் மகாநகரம் என்பதை குறித்து நாம் சற்று சிந்தித்து பார்க்கவேண்டும். தானியேல் 7~ம் அதிகாரத்திலே இருக்கும் பாபிலோன் ராஜ்யம்தான் இந்த உலகத்திலிருக்கும் மற்ற மார்க்கத்திற்கு தலைமையாக இருந்தது. உலகத்திலிருக்கும் கிறிஸ்தவ மார்க்கத்தை தவிர மற்ற மார்க்கங்கள்

யாவும் இந்த பாபிலோன் அரசாட்சியிலிருந்துதான் வந்தது. ஆகவே இந்த பாபிலோன் என்பது தேவனுக்கு விரோதமான அரசாட்சி மாத்திரம் அல்ல, தேவனுக்கு விரோதமான அநேக தத்துவங்களையும் மார்க்கங்களையும் உண்டாக்கினது இந்த பாபிலோன் அரசு.

ஆகவே ஆவிக்குரிய பாபிலோனை பற்றி ஆண்டவர் சொல்லும்போது, பாபிலோன் மகாநகரம் விழுந்தது என்கிறார்.

**“அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகலாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.”**

**–வெளி.17:4,5.**

இங்கு வேசித்தனம் என்பது, உண்மையான தெய்வத்தை விட்டு மற்ற தெய்வங்களை வணங்கும்போது, அது வேசித்தனம் என்று வேதம் சொல்லுகிறது. அநேக மார்க்கத்திலுள்ள கொள்கைகளை கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் கொண்டு வந்து இன்றைக்கு பாபிலோனாக விளங்குகிறது இந்த ரோமன் கத்தோலிக்க திருசபை. ஆகவே ஆண்டவர் இதை குறித்து சொல்லும்போது அது விழுந்தது என்று வேதத்திலே விசேஷமாக நாம்



வாசிக்கிறோம். தேவனை வணங்குகிற அந்த வணக்கத்தை பற்றி மத்தேயு எழுதின சுவிசேஷத்திலே நாம் பார்க்கலாம்.

**“அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?” – மத்.15:3.**

யூதர்களுக்கும் ஆண்டவருக்கும் எப்பொழுதும் வாக்குவாதம் நடந்துகொண்டேயிருக்கும். இந்த யூதர்கள் ஏராளமான சபைசட்டங்கள் வைத்திருந்தார்கள். ஆண்டவரை தொழுதுகொள்ளுவதற்கு சபைகள் அநேகவிதமான காரியங்களை கொண்டுவந்தது. ஆண்டவர், மனுஷனுடைய கற்பனைகளை வைத்துக்கொண்டு ஆண்டவரை வணங்ககூடாது என்று சொன்னார். ஆண்டவருடைய வசனத்தைகொண்டும், அவருடைய சட்டத்தை கொண்டும் தான் அவரை வணங்கவேண்டுமே தவிர, மனுஷனுடைய சட்டம், நியமங்கள், தத்துவங்கள், ஞானங்கள் யாவையும் கொண்டு ஆண்டவரை வணங்ககூடாது என்று அந்த மெய்யான தேவன் சொல்லுகிறார்.

**“இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.”-மத்.15:8.**

மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று சொல்லுகிறார். ஆகவே மனுஷனுடைய சட்டங்களை ஆண்டவர் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. காயீன் ஆண்டவர் சொல்லாத பலியை கொண்டுவந்தான். ஆண்டவரை நேசித்தான், அவர் சொன்னபடி பலிகளை கொண்டுவந்தான், அவருக்கு துதிசெலுத்தினான், ஆனால் அவனுடைய பலியை ஆண்டவர் ஏற்றுக்கொள்ளவில்லையே. காரணம், ஆண்டவர் சொன்னபடி அவன் செய்யவில்லை. ஆட்டுக்குட்டியாக வருவேன் என்று ஆட்டுக்குட்டியை பலியாக கொடுத்தார். அதன்படியே ஆபேல் செய்தான். அதை ஆண்டவர் ஏற்றுக்கொண்டார். ஆண்டவருடைய வசனத்திற்கு விரோதமான காரியங்களை வைத்து ஆண்டவரை தொழுதுகொள்ளமுடியாது. இன்றைக்கு மனிதசட்டங்களான சிறுபிள்ளை ஞானஸ்நானம், ஞாயிற்று கிழமை ஆசரிப்பு, இப்படிப்பட்டவைகள் மனித சட்டங்களாக இருக்கிறது. வேதத்திலே எந்த வசனமும் இதை பற்றி சொல்வதில்லை. அவைகளை வைத்து கொண்டு நாம் ஆண்டவரை தொழுதுகொள்ளும்போது, அந்த ஆராதனை வீணாக இருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆகவே அந்த மனுஷனுடைய கற்பனைகளான மற்ற மார்க்கத்திலிருந்து வந்த தத்துவங்கள் யாவற்றையும் குறித்து வேதம் சொல்லுகிறது: பாபிலோன் மகாநகரம் விழுந்தது. தன் வேசித்தனமான உக்கிரமான மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்க கொடுத்தாளே என்பதற்கு அர்த்தம், மற்ற மார்க்கத்திலிருந்து வந்த தத்துவங்களை நாம் கைக்கொள்ளும்போது, வேசித்தனமான மதுவை நாம் குடிக்கிறோம் என்று அர்த்தம்.

வேசித்தனம் என்பதற்கு, ஆண்டவருடைய சட்டங்களை விட்டுவிட்டு மனிதருடைய சட்டங்களை கைக்கொள்ளுவதேயாகும். மற்ற மார்க்கத்தின் சடங்காச்சாரங்களை நாம் அனுசரிப்பது வேசித்தனம் என்று வேத்திலே சொல்லப்படுகிறது. அந்த வேசித்தனத்தை இன்றைக்கு மக்கள், மதுவைபோல குடித்து வெறித்திருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியென்றால், ஒரு மனிதன் குடித்து வெறித்திருக்கும்போது, அவன்



அவனுக்கு என்ன சொன்னாலும் கேடக்கமாட்டான். அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே நாம் கைக்கொள்ளுகிற அநேக காரியங்கள் வேதவசனத்திற்கு ஒத்துபோதில்லை, அது தப்பிதமான காரியங்கள், அது அஞ்ஞான மார்க்கத்திலிருந்து வந்தது, அது கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய கொள்கையல்ல, என்று எவ்வளவுதான் சொன்னபோதிலும், அநேகர் செவிசாய்ப்பதில்லை, ஏனென்றால் திருமறை சொல்வதுபோல், அவர்கள் மதுபானமான மற்ற மார்க்கத்தின் கொள்கைகளினாலே குடித்து வெறித்திருக்கிறார்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆகவே நியாயத்தீர்ப்பு உட்கார்ந்ததினாலே, இந்த வேதத்திற்கு அப்பாற்பட்ட எந்த காரியமானாலும் சரி, அது விழுந்தது அதிலே பிரயோஜனங்கிடையாது. நியாயத்தீர்ப்பிலே ஆண்டவர் அவருடைய வசனத்தையும், அவருடைய சட்டத்தையும் வைத்துதான் நியாயந்தீர்ப்பார். ஆகவே அவரடைய வசனத்திற்கும் அவருடைய சட்டத்திற்கும் புறம்பானதெல்லாம் விழுந்தது. நாம் எவ்வளவுதான் அவைகளை பக்தியோடு கைக்கொண்டாலும் அதிலே பிரயோஜனங்கிடையாது. அந்த ஆராதனை வீணாகயிருக்கும் என்று தான் ஆண்டவர் அங்கு விசேஷமாக சொல்லுகிறார்.

**“அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.” -வெளி.14:9,10,11.**

இந்த மூன்றாவது தூதன் வரப்போகும் நரகத்தையும் வாதையைப்பற்றியும் பேசுகிறான். இந்த வாதையும் அக்கினியும், மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி, தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனுக்கு வருகிறது. மிருகம் என்பது கத்தோலிக்க திருசபையை குறிக்கிறது. இன்றைக்கு அரசங்காத்திற்கும் திருசபைக்கும் தொடர்பு கிடையாது. அரசாங்கம் வேறு, சபை வேறு. அரசாங்கம் சபையிலே தலையிடகூடாது. ஆவிக்குரிய சட்டங்கள் வேறு, இந்த உலகத்திற்குரிய சட்டங்கள் வேறு. ஆவிக்குரிய சபையிலே, உலகத்தினுடைய சட்டங்கள் வரகூடாது. இவை இரண்டும் ஒன்றாக கலக்ககூடாது. அவனவனுடைய மனதிலே தோன்றினபடி அவனவன் வணங்குவதற்கு ஆண்டவர் சுந்தந்திரம் கொடுத்திருக்கிறார். தனக்கு இஷ்டமானபடி வணங்குவதற்கு, தனக்கு இஷ்டமான சபையிலே இருப்பதற்கு, தனக்கு இஷ்டமான வழியிலே நடப்பதற்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறார். அந்த சுதந்திரத்தை எந்த சக்தியும் தடைப்பண்ணகூடாது. இப்படியிருக்க, அரசாங்கம்



நடுவில் வந்து, இல்லை நீ இப்படி செய்யகூடாது, இந்த மார்க்கத்தைதான் நீ கைக்கொள்ளவேண்டும், இந்த மார்க்கத்தைதான் நீ வணங்கவேண்டும் என்று சொல்வார்களானால் அது சரியல்ல. இதற்காகதான் ஆண்டவர் இந்த அரசாங்கத்தை மிருகத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார்.

அன்று உண்மையான கிறிஸ்தவர்களை கத்தோலிக்க சபையோடுகூட சேர்ந்து அரசாங்கமும் சிவில் சட்டத்தின் மூலமாக எத்தனையோ லட்சக்கணக்கான பேரை கொன்று போட்டார்கள். ஆகவே சபை ஆண்டவருடைய வழியிலே போகவேண்டும். அப்படியில்லாமல் சபையை கொண்டுபோய் அரசாங்கத்தோடே சேர்த்தால், ஆண்டவருக்கு பிரியமாயிருக்குமா ?

வரப்போகிற பயங்கரமான சாபங்களை பற்றி வேதம் நடந்து முடிந்த எந்த காலக்கட்டத்திற்கும் சொல்லவில்லை. இனி வரும் காலத்திற்கு குறிப்பிட்டு சொல்லுகிறது. வருகிற அவ்வளவு பெரிய பயங்கரமான சாபத்திலே தேவனுடைய பிள்ளைகள் சிக்கிக்கொள்ளகூடாது. அந்த வாதை நம்மீது வரக்கூடாது. மிருகத்தினுடைய சொரூபத்தை (கத்தோலிக்க சபையை) வணங்குபவர்களுக்கு பெறும் வாதைகள் வர போகிறது என்று ஆண்டவர் சொல்லுகிறார். இது தவறு கத்தோலிக்க சபையை குறிக்கவில்லை என்று

யாராவது சொல்வார்களானால் “மிருகத்தின் முத்திரை”, “தேவனுக்கு எதிரான கூட்டாட்சி” என்ற எமது புத்தகங்களை வாங்கி படியுங்கள். அதிலே இன்னும் விபரமாக சரித்திரத்தோடே ஏன் அந்த கத்தோலிக்க சபையை குறிக்கிறது என்பதற்கு சரியான முழுவிபரம் கிடைக்கும். எனது ஈ~மெயில் மூலமாக தங்களுடைய விண்ணப்பத்தை அனுப்பினால், உடனே தாமதமல்லாமல் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். ange.almode@tiscali.fr

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், அந்த மிருகத்தின் முத்திரையை தரிக்ககூடாது என்று ஆண்டவர் எச்சரிக்கிறார்.

ஆகவே இந்த மூன்று தூதுகளையும் ஏற்று கொள்ளுகிற தேவனுடைய பிள்ளைகள் எப்படி இருப்பார்கள்?

**“தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான்.” – வெளி.14:12.**

இயேசு கிறிஸ்துவின் விசுவாசம் என்றால் என்ன? கல்வாரி சிலுவையானாலும், அதனால் வரும் துன்பமானாலும் துயரமானாலும் மரணமானாலும், ஆண்டவருடைய கற்பனைகளை காத்து கொள்ளுகிறவர்களின் விசுவாசம் பெரிதாக இருக்கவேண்டும். இப்படியாக மூன்றாவது தூது, மிருகத்தின் முத்திரையை பேசி முடிக்கும்போது, நான்காவது தூதனுடைய சத்தம் கேட்கப்படுகிறது.

**“இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; இவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. .” – வெளி.18:1,2.**

“இவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று” என்பதற்கு அவனுடைய சத்தம்



உலகமெங்கும் போயிற்று என்று அர்த்தமாகிறது. “அவன் பலத்த சத்தமாய்” என்பதற்கு, இந்த நான்கு தூதர்களும் பெரிய சத்தம்போட்டு அந்த தூதுகளை சொல்லுகிறார்கள். மனிதர்கள் ஒவ்வொருவரும் அந்த தூதுகளை கேட்கவேண்டும். **“மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. .”** எல்லா அசுத்தமும் சபைகளிலே வந்துவிட்டது. அந்நிய மார்க்கத்தினுடைய கொள்கைகள், அசுத்தமான காரியங்கள், விக்கிரக ஆராதனையான காரியங்கள் யாவும் இந்த சபையிலே வந்துவிட்டது. இவை யாவும் கர்த்தருக்கு அருவருப்பு என்று வேதம் சொல்லுகிறது. பேய்களுடைய உபதேசம் என்ன சொல்லுகிறது ? ஆத்துமா சாகாதென்று. பழத்தை புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய் என்று ஆண்டவர் சொன்னார். ஆனால் பிசாசோ நீ சாகவே சாவதில்லை என்று சொன்னான். இப்படியாக ஆத்துமா சாகாது, செத்தவர்கள் மேலே பறந்துகொண்டிருக்கிறார்கள், கனவிலே வருகிறார்கள்

என்றெல்லாம் பேய்களுடைய உபதேசங்களாக இருக்கிறது. அந்த பேய்களுடைய உபதேசங்கள் கிறிஸ்தவ மார்க்கத்திலே குடியிருப்பாக வந்துவிட்டது என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே தப்பிதமான உபதேசங்களை மக்கள் குடித்து வெறித்திருக்கிறார்கள். அது தப்பு என்று சொன்னால்கூட புரிவதில்லை. இதை பற்றி வேதம் சொல்லவில்லை என்று சொன்னால்கூட நம்ப மறுக்கிறார்கள்.

**“பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். ” ~வெளி.18:4.**

நோவாவின் காலத்தில் இதோ ஜலப்பிரளயம் வரபோகிறது, இந்த உலகத்திலிருந்து வெளியே வந்து தான் செய்த பேழைக்குள்ளே வந்து சேர சொன்னான். வந்து சேர்ந்தவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

தேவதூதர்கள் லோத்துவை பாத்து, பட்டணத்தை அழிக்கபோகிறோம் வெளியே வாருங்கள் என்று அழைத்தார்கள். வெளியே வந்தவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

இதோ இனி வரப்போகும் அழிவுக்குமுன் வாதைகளுக்கு தப்பித்துக்கொள்ள தேவன் இந்த உலகத்தையே வெளியே வர அழைக்கிறார். அஞ்ஞான கொள்கைகள், அஞ்ஞான மார்க்கங்களிலிருந்து வெளியே வாருங்கள் என்று ஆண்டவர் விசேஷமான தூதை யாவருக்கும் அனுப்புகிறார்.

ஆகவே பாபிலோனின் கொள்கைகளை பிடித்து கொண்டு இருப்போமானால், வரும் வாதைகளில் நாம் தப்பமுடியாது. அந்த பயங்கரமான வாதைகளுக்கு நம்மை கொண்டுபோவது, அந்த மிருகத்தின் முத்திரைதான். அந்த தப்பான உபதேசங்ளை விட்டு வெளியே வாருங்கள் என்று விடாமல் ஆண்டவர் அழைக்கிறார். **வருகிறது ஞாயிறு ஆசரிப்பு சட்டம் ! ஜாக்கிரதையாக மனந்திரும்புவோமாக! வருகிறது தேவனுடைய அரசாட்சி ! ஜாக்கிரதையாக மனந்திரும்புவோமாக! ~ ஆமென்! ஆமென்! ஆமென்!**